## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
## அசல் வழக்கு எண்.283/2017

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 09.04.2026 | | |
| பெயர்: | கலைச்செல்வி (PW2– Cross ) | கணவர் பெயர்: | சிங்காரவேலு |
| கிராமம்: | அகனி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | வீட்டுக்குடித்தனம் | வயது : | 34/2026 |

**<u>1 முதல் 8, 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : 09.04.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 13.22)**

1. தாவா வழக்கு என்பது 14 அயிட்ட சொத்திற்கு உரியது. எந்தெந்த சர்வே எண் என்று எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்துக்களின் விஸ்தீரணம் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி வழக்கு பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துக்கள் அனைத்தும் எனது தாத்தாவான கோவிந்தராஜன் (எ) கோவிந்தசாமி என்பவருக்கு சொந்தமானது ஆகும். கோவிந்தராஜன் என்ற புனைப்பெயர் அவருக்கு கிடையாது என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்தில் வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை.

2. அவரவர்கள் வீடு கட்டி கொண்டு தனித்தனியாக வசித்து வருகிறார்கள். தாவா சொத்துக்களில் பெரும்பாலான சொத்துக்களை எனது தகப்பனார் ராஜசேகரன் உயிருடன் இருந்த காலத்தில் விற்பனை செய்துவிட்டார் என்றால் சரியல்ல. நஞ்சை, நத்தம், புஞ்சை மனைக்கட்டு பாகம் பிரிக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. கோவிந்தசாமிக்கு 5 ஆண் வாரிசுகள் மற்றும் 2 பெண்

வாரிசுகள் என்றால் சரிதான். நத்தம் புஞ்சை மனைக்கட்டு 5 ஆண் வாரிசுகளுக்கு சமமாக பிரிக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல.

3. எனது தந்தை ராஜசேகரருக்கு குடியிருப்பு மனை மற்றும் குடிசை வீடு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தில் தான் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் இல்லை, எனது தகப்பனார் காலத்திலிருந்து அந்த இடத்தில் வீடு உள்ளது. அதில் குடியிருந்து வருகிறேன். கடந்த 15.07.2000 த்தில் எனது தந்தை ராஜசேகரன் பாக பாத்திய விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த விடுதலை பத்திரத்தில் குடியிருப்பு மனை வீட்டை தவிர வேறு எந்த பாகமும் கேட்பதில்லை என எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

4. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து எனது தகப்பனார் கையெழுத்தா என்றால் இல்லை. பாகம் பிரிக்கப்பட்டு அவரவர்கள் 26 வருடம் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் அவரவர்களுக்கு உள்ள இடத்தில் அரசு உதவி பெற்று வீடு கட்டி உள்ளார்கள் என்றால் வீடு கட்டி உள்ளார்கள். ஆனால், அரசு உதவி பெற்றாரா என்று எனக்கு தெரியாது. 14 மா நிலத்தை ராஜசேகரனுக்கு 2 மாவும், 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தலா 2 மாவும், காலம் சென்ற கோமதிக்கு 2 மாவும் பிரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

5. வசந்தாவிற்கு ஒதுக்கப்பட்ட 2 மா நிலத்தை பாலச்சந்திரனுக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரியல்ல, பாகம் பிரிக்கவே இல்லை. அதை போல கோமதிக்கு ஒதுக்கப்பட்ட 2 மா நிலத்தை பாலச்சந்திரனுக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரியல்ல, பாகம் பிரிக்கவே இல்லை. வாதிகளும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 2 மா நிலத்தை பாலச்சந்திரனுக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரியல்ல, பாகம் பிரிக்கவே இல்லை. அதனால், பாலச்சந்திரனிடம் 8 மா நிலம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. உண்மை நிலை இவ்வாறு இருக்கும்போது நான் பாகப்பிரிவினை கோருவது

சரியல்ல என்றால் சரியல்ல. அதனால் எனக்கு எவ்வித பாகமும் இந்த வழக்கில் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் தாவா வழக்கை பிரதிவாதிகள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**9, 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

9, 10 ம் பிரதிவாதிகளுக்கு எதிராக நான் எந்த பரிகாரமும் கோராத காரணத்தால் அவர்களை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்–13.43)**